IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.3/2017
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.00 p.m.

வா.சா. 1 சாட்சி அருண்மொழி த.பெ.குண்டுமலை

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.04.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கையெழுத்து செய்த மாரியப்பனை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மாரியப்பன்தான் உயில் ஆவணத்தில் இன்னார் என்று நிரூபணம் செய்து கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மாரியப்பன் எந்த ஊரைச் சார்ந்தவர் என்றும், அவரை பற்றிய விபரமும் எனக்கு தெரியாது.

2. வா.சா.ஆ.3 ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ள சுப்புலட்சுமிக்கு மோகன், ஜீவானந்தம் என்ற இரண்டு பேர் வாரிசுகளாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இருவரும் எப்போது இறந்தார்கள் என்றால் தெரியாது. மேற்படி இருவரில் ஒருவர் சுப்புலட்சுமிக்கு முன்பாகவும், ஒருவர் அவர் இறந்தபிறகும் இறந்துள்ளார்.

3. உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயில் ஆவணம் எங்குவைத்து, யாரால் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. உயிலில் உள்ள சொத்து சுப்புலட்சுமிக்கு தனிப்பட்ட சொத்தா, பூர்வீக சொத்தா என்றால் எனக்கு தெரியாது. உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்து சம்மந்தமான பட்டா, சிட்டா ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை.

4. உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ள நடராஜன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். மேற்படி நடராஜன் எனக்கு உறவினர் என்றால் எனது அண்ணனின் மாமனார் ஆவார். எனக்கு மாமா ஆவார். மேற்படி நடராஜன் அனைத்து வாய்தாவிற்கும் நீதிமன்றத்திற்கு என்னுடன் வருவார் என்றால் சரிதான்.

5. நடராஜன் கூறிதான் வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, எனது தந்தை கூறிதான் தெரியும். எனக்கு வழக்கு பற்றிய விபரம் நேரடியாக தெரியாது. எனது நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது, எழுதி இருந்ததை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். உயில் ஆவணத்தில் உள்ள சொத்திற்கு சுப்புலட்சுமிக்கு நேரடியாக உரிமை கிடையாது என்றாலும், அவரது வாரிசுதாரர்களுக்குத்தான் உரிமை உள்ளது என்றாலும் சரிதான், எனது அப்பாவிற்கு உயில் எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

6. உயிலில் கட்டுப்பட்ட சொத்து சம்மந்தமாக சுப்புலட்சுமியின் மகன்களான மோகன் மற்றும் ஜீவானந்தம் மற்றும் மோகனின் வாரிசுதாரர்கள் யாரும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

தற்போது வரை உயிலில் உள்ள சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் மற்றும் 1ம்பிரதிவாதியின் மகன்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

7. மேற்படியார் சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு நானும், எனது சகோதரர்களும் சென்று நேரடியாக ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணமானது சுப்புலட்சுமி என்பவர் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. உயிலில் உள்ள சொத்துக்கள் சுப்புலட்சுமியின் கணவருக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவரது வாரிசுகளுக்குத்தான் பாத்தியம் என்றும், எங்களுக்கு உயில் மூலம் எந்த உரிமையும் கிடைக்காது என்றால் சரியல்ல.

8. ஜீவானந்தம் இறக்கும்வரை மோகனின் வாரிசுதாரர்களின் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல, எனது தந்தையின் பராமரிப்பில் இருந்தார். ஜீவானந்தத்தின் பாத்திய உரிமையை மோகனின் வாரிசுதாரர்களுக்கு உயிருடன் இருக்கும்போதே கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

9. மேற்படி அறிவிப்பில் என்ன பரிகாரம் கேட்டு அனுப்பப்பட்டுள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், உயில் செல்லாது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:3.20pm.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 18:24:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.